

பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பேராசிரியர் பெருந்தகை அவர்களால் திறந்து வைக்கப்பட்ட அருப்புக்கோட்டை கிளை நூலகத்தில் விரிவான ஆய்வு செய்தார். மேலும் வாசகர்கள் மற்றும் நூலகரிடம் கலந்துரையாடி, சுகாதார வளாகம் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தி தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதி அளித்தார்.



கோவை ஆவாரம்பாளையம் ரெட்ரோஸ் பேக்கரி அருகில், திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் நடைபெற்ற நீட் தேர்வை எதிர்த்து உயிர் நீத்த அனிதா நினைவேந்தல் நிகழ்ச்சியில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் ஆகியோர் கலந்து கொண்டு அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர். திராவிட இயக்கத் தமிழர் பேரவை கோவை மாவட்டச் செயலாளர் கா.சு.நாகராஜ், கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவைச் செயலாளர் பொள்ளாச்சி உமாபதி, மாநகர் மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், பீளமேடு பகுதி 2 செயலாளர் மா.நாகராஜ், மாநகர் மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி அமைப்பாளர் நா.பாபு கோபிநாத், கழக நிர்வாகிகள், திராவிட இயக்கத் தமிழர் பேரவை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# மாநகர - ஒன்றிய - நகர - பேரூர் - பகுதி கழகங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!



முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தியபடி, வருகின்ற 2026-ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் அதிக இடங்களில் தி.மு.கழகம் அமோக வெற்றி பெற வேண்டியும், அதற்கான பல்வேறு ஆக்கப் பணிகள் மேற்கொள்வது குறித்தும் விவாதித்திட விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு. கழகத்தில் உள்ள நிர்வாக அமைப்புக்களின் சார்பில் பொது உறுப்பினர் கூட்டம், கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெற உள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

**விருதுநகர் வடக்கு மாவட்ட திமுக**

**ஒன்றியம் - நகரம் - பேரூர்- பகுதி வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம்**

| நாள் | நேரம் | ஒன்றியம் - நகரம் - பேரூர்- பகுதி | இடம் |
|---|---|---|---|
| 03-09-2024 செவ்வாய் | காலை 10.30 | சிவகாசி வடக்கு | ஸ்டாலின் செல்லத்துரை திருமண மண்டபம், எம்.புதுப்பட்டி |
| 03-09-2024 செவ்வாய் | மாலை 5.00 | காரியாபட்டி மேற்கு | இராஜாமணி திருமண மண்டபம், மல்லாங்கிணர் |
| 03-09-2024 செவ்வாய் | மாலை 6.00 | விருதுநகர் நகரம் | வி.வி.எஸ்.திருமண மண்டபம், விருதுநகர் |
| 03-09-2024 செவ்வாய் | மாலை 6.00 | சிவகாசி கிழக்கு | சமுதாயக்கூடம், மாரனேரி |
| 04-09-2024 புதன் | காலை 10.00 | காரியாபட்டி கிழக்கு | பேரூராட்சி திருமண மண்டபம், காரியாபட்டி |
| 04-09-2024 புதன் | காலை 10.00 | நரிக்குடி வடக்கு | அல்அமீன்.திருமண மஹால், வீரசோழன் |
| 04-09-2024 புதன் | மாலை 5.00 | நரிக்குடி தெற்கு | நாடாளுமன்ற உறுப்பினர் தோட்டம், கே.கே.மாணிக்கம் |
| 04-09-2024 புதன் | மாலை 5.00 | காரியாபட்டி பேரூர் | பேரூராட்சி திருமண மண்டபம், காரியாபட்டி |
| 04-09-2024 புதன் | மாலை 6.00 | பகுதி - 5, சிவகாசி மாநகரம் | சமுதாயக்கூடம் |
| 04-09-2024 புதன் | மாலை 7.00 | பகுதி - 4, சிவகாசி மாநகரம் | ராயல் மினி மஹால் |
| 05-09-2024 வியாழன் | மாலை 6.00 | பகுதி - 1, சிவகாசி மாநகரம் | தேவர் திருமண மண்டபம் |
| 05-09-2024 வியாழன் | மாலை 7.00 | பகுதி - 3, சிவகாசி மாநகரம் | ஆர்.ஆர்.திருமண மண்டபம் |
| 06-09-2024 வெள்ளி | காலை 10.00 | திருச்சுழி வடக்கு | ஜி.எஸ்.டி.திருமண மஹால், திருச்சுழி |
| 06-09-2024 வெள்ளி | மாலை 7.00 | பகுதி - 2, சிவகாசி மாநகரம் | ஐயப்பன் திருமண மண்டபம் |
| 06-09-2024 வெள்ளி | மாலை 7.00 | பகுதி - 6, சிவகாசி மாநகரம் | ஆர்.எஸ்.ஆர்.திருமண மஹால் |
| 07-09-2024 சனி | மாலை 3.00 | திருச்சுழி தெற்கு | சத்தியா திருமண மண்டபம், ம.ரெட்டியாபட்டி |
| 09-09-2024 திங்கள் | மாலை 6.00 | சிவகாசி மாநகரம் | கனி திருமண மஹால், திருத்தங்கல் |

**அமைச்சர் தங்கம் தென்னரசு**
செயலாளர்
விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க.



திமுக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ கடந்த வாரம் சென்னை அண்ணா நகரில் தொடங்கிய ராகேஷ் சட்ட நிறுவனத்திற்கு திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, திமுக தலைமை நிலைய செயலாளர் பூச்சி எஸ்.முருகன், தலைமை கழகப் பேச்சாளர் சூர்யா வெற்றி கொண்டான், வழக்கறிஞர் நம்பிராஜன், திமுக பிரமுகர் நாகை முருகன் ஆகியோர் நேற்று (02.09.2024) நேரில் சென்று வாழ்த்து தெரிவித்தனர்.

## தமிழ்நாட்டில் தொற்றுநோய்கள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன!

# டெங்கு - மழைக்கால நோய்கள் தடுப்பு நடவடிக்கைகள்!

### மாநில – மாவட்ட அளவிலான அலுவலர்களுடன் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு!

சென்னை, செப்.3-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (02.09.2024) சென்னை, ஓமந்தூரார், அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னாக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், டெங்கு மற்றும் மழைக்கால நோய்கள் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, நகராட்சி நிர்வாகத்துறை, ஊரக வளர்ச்சித்துறை மாநில மாவட்ட அலுவலர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் குரங்கம்மை நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் கையேட்டினை வெளியிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ள நிலையில் தொடர்ச்சியாகவும், மழைப்பொழிவுகள் என்பது தென்மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவ மழை, கோடை வெப்பமழை, வெப்ப சலனம் மழை என்றெல்லாம் தொடர்ந்து மழைபொழிவுகள் இருந்து கொண்டிருக்கிற காரணத்தினாலும், மாநில அளவில் இந்த மழை பாதிப்புகளால் உண்டாகின்ற நோய்கள் குறிப்பாக டெங்கு, அதேபோல் மழைக்கால தொற்று நோய்களாக இருக்கின்ற வயிற்றுப்போக்கு, டைபாய்டு, மஞ்சள் காமாலை, எலி காய்ச்சல் மற்றும் உண்ணி காய்ச்சல் போன்ற பருவ கால நோய்கள் பரவாமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் என்கின்ற வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, மாநில அளவிலான டெங்கு மற்றும் தொற்று நோய்கள் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, நகராட்சி நிர்வாகத்துறை, ஊரகவளர்ச்சித் துறை போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த உயர் அலுவலர்களுடன், மாவட்ட வாரியாக இருந்து இணை இயக்குனர்கள், துணை இயக்குனர்கள், மருத்துவ கல்லூரி முதல்வர்கள் என்று 400க்கும் மேற்பட்ட உயரலுவலர்கள் கலந்து கொண்ட கூட்டம் தொடங்கியிருக்கிறது. இன்று ஒரு நாள் முழுவதும் இந்த கூட்டம் இங்கு நடைபெறவிருக்கிறது. மக்களை நோய் தொற்றிலிருந்து காப்பாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் என்னவெல்லாம் எடுப்பது போன்ற பல்வேறு விஷயங்கள் கலந்து ஆலோசனை செய்யப்படவிருக்கிறது.

இதுவரை தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிற இந்த ஆண்டுக்கான டெங்கு பாதிப்பு என்பது 11,743. இதில் இறப்புகளை பொறுத்தவரை 4 என்கின்ற எண்ணிக்கையில் நிகழ்ந்திருக்கிறது. நேற்று ஒருநாள் டெங்கு பாதிப்பு 205 ஆகும். கடந்த ஆண்டுகளில் குறிப்பாக 2012இல் 66 இறப்புகளும், 2017இல் 65 இறப்புகளும் இவை இரண்டு ஆண்டுகளில் தான் அதிகபட்சமான இறப்புகள் என்பது பதிவாகி இருந்தது.

அந்த நிலையில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இன்றைக்கு அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளையும் ஒருங்கிணைத்து, இந்த டெங்கு பாதிப்புக்குள்ளானவர்களை பட்டியலில் இணைப்பது என்கின்ற வகையில் தொடர்ச்சியாக அந்த பணிகள் செய்து கொண்டிருக்கிற காரணத்தினால், இந்த ஆண்டு இதுவரை 11,000த்திற்கும் மேற்பட்டவர்களுக்குரிய அந்த பாதிப்புகள் கண்டறியப்பட்டு உயிரிழப்புகள் குறையத் தொடங்கியிருக்கிறது.

அந்த வகையில் தமிழ்நாட்டினைப் பொறுத்தவரை 4,676 அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளை கண்காணிக்கும் பணியினை இந்த துறை செய்து கொண்டிருக்கிறது. இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு ஏற்ப நாளையிலிருந்து எல்லா மாவட்டங்களிலும் இந்த துறைகள் ஒருங்கிணைப்பு என்பது இப்போது மாநில அளவிலும் மாவட்ட அளவில் இங்கு சென்னையில் நடைபெற்றுக் கொண்டிருப்பதை போலவே அவரவர்களுடைய மாவட்டங்களிலும், சுகாதார மாவட்டங்களில் இதேபோன்று அனைத்து துறைகளைச் சேர்ந்த ஏறத்தாழ 11 துறைகள் இன்றைக்கு இங்கே பங்கேற்றிருக்கிறார்கள். இந்த 11 துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளையும் அந்தந்த மாவட்டங்களில் ஒருங்கிணைத்து பணிகளை ஆற்றிட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த வகையில் நாளையிலிருந்து இவர்கள் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது, தனியார் மருத்துவமனைகளையும் கண்காணித்து டெங்கு பாதிப்புகளை கண்டறிவது, டெங்கு பாதிப்புக்குள்ளானவர்களுக்கு தீவிர சிகிச்சைகள் அளித்து அவர்கள் யாரும் மருத்துவர்களை நாடாமல் மருத்துவமனைகளுக்கு வராமல் தனியாக சிகிச்சை எடுத்துக்கொள்ள அனுமதிக்காமல் அவர்களுக்கு போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்துவது போன்ற பல்வேறு பணிகளை அந்தந்த மாவட்டங்களில் செய்யவிருக்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, ஊரக வளர்ச்சித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, நகராட்சி நிர்வாகத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன், தேசிய நலவாழ்வுக்குழும இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதிஷ், தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழக இயக்குநர் அரவிந்த், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநர் திருமதி.விஜயலட்சுமி, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) ஜெயச்சந்திரபானு ரெட்டி, சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய இயக்குநர் வினய், நகராட்சி நிர்வாக ஆணையர் சிவராசு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட இயக்குநர் (ICDS) திருமதி.மெர்ஸி ரம்யா, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு. இராஜமூர்த்தி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் மற்றும் அனைத்துறை உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வட்டச் செயலாளர் எல். ஆரோக்கியராஜ் தலைமையில் - இரா.துரைராஜ் முன்னிலையில்

# 169வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்! அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

### தமிழச்சி தங்கபாண்டியன் - மு.மகேஷ்குமார்- எஸ்.குணசேகரன் - வாசுகி பாண்டியன் பங்கேற்பு!

சென்னை, செப். 3 -

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 169 வது வட்ட தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (3.09.2024. செவ்வாய்கிழமை) மாலை 6.30 மணியளவில் இடம் புனித தோமையார் சமூக நலக்கூடத்தில் வட்டச் செயலாளர் எல்.ஆரோக்கியராஜ் தலைமையில் பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் முன்னிலையில் நடைபெறுகிறது.

பகுதி துணைச் செயலாளர் மு.ஆரோக்கியம், மாவட்டப் பிரதிநிதி இரா. சுதாபிரியன், வட்ட நிர்வாகிகள் அ.ஆரி , துரை.சரவணன், ஆ.விக்டர், மு.சந்திரா, மை.அருள்ராஜ், வி. என்.செல்வமணிஇ சூரியன் கே.பிரபு, அ.ஆனந்தராஜ், ஆ.பரணி ஆகியோர் வரவேற்கின்றனர்.

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., சென்னை மாநகர துணை மேயர் மு.மகேஷ்குமார், மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், தொகுதி பார்வையாளர் வாசுகி பாண்டியன், பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர். ராஜ்குமார், மு.பாக்கியலட்சுமி, ஆர்.அருணகிரி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

வட்ட துணைச் செயலாளர் இரா.தமிழ்வாணன் நன்றி கூறுகிறார்

இக்கூட்டத்தில் 169 வது வட்டத்தில் அடங்கிய அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள், வட்ட இளைஞர் அணி, வட்ட மாணவர் அணி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், மகளிர் அணி, கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு இக்கூட்டத்தை சிறப்பிக்குமாறு வட்டச் செயலாளர் எல். ஆரோக்கியராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா.சடகோபன்

**செப்டம்பர் 3 (1979)**



**சென்னையில் கழகத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கு பாடுபட்டவர்களில் ஒருவர்.**

**1961ஆம் ஆண்டு சென்னை நகரக் குடிசை வாழ்வோர் மாநாடு நடத்தி அந்த சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்தவர்.**

**கழகத்தின் பொதுக்குழு உறுப்பினராகவும், 1959 முதல் 1968 வரை சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும், 1965–66இல் துணை மேயராகவும், 1967இல் மாநகராட்சி மத்திய குழு தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.**

**விலைவாசி உயர்வு எதிர்ப்பு – இந்தி எதிர்ப்பு ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்டவர்.**

**தலைவர் கலைஞரின் அன்புக்கு பாத்திரமானவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**